பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

# ஷரீஅத்தின் தர்பார்.

இஃது

மார்க்கம்பட்டி கான்முஹம்மது சாஹிபு குமாரர் பள்ள
பட்டி என்ற வள்ளல் நகரத்திலும் பெரியகுளம் தாலூகா
அன்னஞ்சியிலும் வசித்திருந்த

## மா. கா. முஹம்மது இபுராஹீம்

சாஹிப் அவர்கள் இயற்றியதை

திருச்சினாப்பள்ளி ஜில்லா வடகரை மௌலானா மௌலவி
முஹம்மதப்துல்லா சாஹிபும், பேர்ணம்பட்டு மௌலானா
மௌலவி புர்ஹானுத்தீன் சாஹிபவர்களாலும் இந்நூலை
பரிசோதித்து ஷாருக்கு சேருமதென்று கைபொப்பங்கள்
பெற்றும் மூந்திப பதிப்பித்திருந்ததை பள்ளபட்டி ஆங்கில
வித்திபாபோதகாசிரியரும் செந்தமிழ் பிரசங்க வித்துவானு
மாகிய K. S. M. அப்துல்றஹ்மான் சாஹிப் அவர்களால்
பிழைதிருத்தியும் சிலபாடல்களும்சேர்த்து
இந்நூல் ஆசிரியரால்

மதுரை அஷ்டலக்ஷ்மி விலாசம் அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை) 1925. (அணா 2

மூன்றும் பதிப்பு

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

MADRAS

97
N25
177523

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

# ஷரீஹத்தின் தர்பார்

## காப்பு.

ஆதிய யெவையும் படைத்தாண்டருள்க்
கோதிலாதிரையேக் குணசீலால்
வேதராமிரசூல் பொருட்டாவிவை
ஒதநல் லரிவுற்றருள் காப்புனீ.

## வசனம்.

ஹர்தோஜஹானுக்கும் ஸர்தாரான சர்பவல்லபப் பொருளாகிய ஹக்சுபஹானுகுவத்த ஆலாவினுடைய நமது சர்வரேஆலம் நபிசல்லல்லாகு அலைஹிவ சல்லமவர்களின் உம்மத்துக்களான நம்மளில் ஜமாஅத்துக்கள் முஅதின் லப்பைமார்கள் ஆலீம்ஆபிது மௌலுவி ஹஜ்ஜாஜிகள் உலமாக்கள் அவுலியாக்கள் இன்னுமற்றுமுண்டாவான மூமீன் முஸிலீம்கள் வணக்கத்திற்குரிய சகல சீதேவிகளையும் யான் மகாமாக்ஷிமைப்படுத்திப் புகழக்கடமையுற்றவனாக இரிக்கின்றேன் என்றாலும் பெயருக்குமட்டிலும் அத்தகையுடையவர்களாயும் தன்மையிலோ இகழ்க்ஷிக்குரியவர்களாகிய சிலரைப்பற்றி இப்பூமிதனிலுள்ள யாவருக்கும் நன்றாகத் தெரியும்படியாய் கூருவோமாக.

## கந்துக்கணக்கன்மீது

### வெண்பா.

கந்துவட்டியேவாங்கி காப்பி ரொட்டி தின்றதல்லால்
குத்திக்கணக்கெழுதக்கோரி நின்ற அந்தகனே
சொந்தகுரு ஆனனதுக் தோற்றும் நகரமதை
தந்தேனெனச் சொன்னதால்.

### தெம்பாங்கு.

கொண்ட ஈமானே குமுகுமெனும்—நம்
கோமாநபிதீனே ஜம்ஜம்மென கொ.
காசுபெரிதென்றெண்ணிக் கந்துவட்டி வாங்குவோர்க்கு
தோசக்கெனும் நாகம் சொந்தமுமக் காக்கிடுவான்
ஆசைக்கொள்ளாதே வட்டியின் னேசம் பொல்லாதே
மோசம் பொல்லாதே வட்டிக்காசும் நில்லாதே கொ
முன்னமிந்த ஷரீஹத்தின் தர்பாரில் சொன்னதில்லாம்
பின்னமென வெண்ணிச்சிலர் வேண்டுகிறீர் வட்டிகந்தை
கொள்ளலாகுமோ விட்டுத் தள்ள லாபமே
வள்ளல் தீனோர்கள் வட்டி வாங்க பாவமே
பாய்-ஆதிஷரஹைஹவிட்டு ஓதியும் சிலர்கள் வட்டி
ஜாதித்துலுக்கரென வீதியிற் வல்லவட்டம்
நீதிபூமான் நபிக்கினீ ரீமான் ருகாண்டீரே-வ

வாதிஇபுலிசாய் பூமேர்வந்து முளைத்தீரே
ஏழைகுடிகெடுக்க பேன்பிறந்தீர் பூவுலகிற்
நாளைமகஷரிடம் ஆளாவீர் தேள்நாநிற்
வட்டி கொள்ளாதே யந்த துட்டை யள்ளாதே
மொட்டை தட்டியும் குடிகள் கேட்டே போய்விடும்
ஓய்-கந்துவட்டிக் கடையாரே காப்பி ரொட்டி தின்றவரே
வந்துஉதித்தீரே காண் வள்ளல்நபி உம்மத்திலேகொண்ட
[ஈமானே
இந்தக்குவலயமீதே வண்டர்களே வீண்வட்டி வாங்கிடத்
[தீதே
வேய்-காசுபெரிதென்றெண்ணி கந்துவட்டிக் கடைகள்வைத்து
வேசைத்தொளிலெடுத்து மோசமேலைக் கொண்டீரே
[காணென்று
விசேஷம் ஷரஹைறவிட்டாலே தோசம்
மனுனன் நபிதீனில் வட்டி வாங்கி நோர்நாசம்
பாய்-பந்திகுறங்கு கழுதை மாணி- நொய்தவாரேசெய்து-வட்டி
தந்திரமாய் வாங்கநாடி தாடியைச் சிறைககலாமோ
என்று சொலகிரீரென் முன்நில்லுத் நில்லுங்காண்-பகிர்
சொன்னலல்லது சும்மாப் பாரில்விடுவேனே
பாரிலுள்ளோர் ஜலவாணதயைப்பன்றி நாய் கழுதையைப்
[போல்
வாரியவயர் நிரப்ப வாங்கலாமோ வட்டிகந்து
பாரும் சபையோரே யிவர்களேளுங் கழுதையைக்
கூறும் கணக்கிலே செய்கை மகஷர் வெளியிலே
ஆஹா-எமனெனும் புலிவந்திழுக்கயிலே யுங்களுயிர்-வட்டி
ஜாமத்துரேகிமுகம் சாக்ஷிகாட்டும பன்றியப்போல்-ஓசோ
காக்ஷிமகஷரிலுங்கள் முகம்சாக்ஷி சொல்லுமே
மோக்ஷமிளந்தே நறகாக்ஷியாகுமே
பல்சே-முத்திரைப் புயநபியால் வெத்திகொளும் உம்மத்து நாம்
அததன்மீதாணை யாணையாகாது வட்டி வாங்க
சத்தியமதாய் வட்டி விட்டிட நலம்
வெத்திமகசரே நாம் முத்தி பெருந்தலம்

தெம்பாங்கு முற்றிற்று.

---

இந்த ஜென்மமெடுத்துச்செய்த கன்மவினை முழுதும்
உந்தன் மகஷரிர் வேதாயெந்தன் கணக்கிற் வந்திடாதோது

வாய் நீதா.

வந்தவினையோடிட மனமாயிகையிருளோட்டியுன் னருளேமிக [பாய்
தந்துவுன்னடுமை யெனைகார்பாய் கிருபையுந்திந்தவுலகின்வினை தீர்ப்

## வசனம்.

இவ்வுலகத்தின் கண்ணிருனென்ற யெனது அன்பர்களான
நேசர்களே கேளுங்கள் இந்நூல் ஷரீஹத்தின் தர்பார்யென்னும்
சரிதையிற் நம் தீன்தார்கள் நடத்தவேண்டிய மார்க்கவிதியின்படியே
கடவுளின் கிருபையால் யான்பாடி ஷை கவிகளை சுமார் 8, 9 வருடத்
திற்கு முன்னமே பிரசுக்குவிட்டு அதை உலகத்தோர்களின் சமுகம்
பிரசுரம் செய்ததில் ஆண்டவன் கிருபையால் அனேகம் பட்டணங்
களிலும் சிற்றூர்களிலும் வட்டி கந்துகள் ஆயிர ஆயிரக்கணக்கிற்
வாங்கிக்கொண்டிருந்தவர்களில் நல்ல சீதேவிதனத்தை அடைந்து
கொள்ள பிரியமுற்ற தீனோர்கள் முற்றிலும் வட்டிகந்துவாங்குவதை
விட்டுவிட்டு வெவ்வேர் வியாத்தகங்களை செய்து நடைபெற்றுவருவதை
யானும் நேரில் பார்த்திருக்கின்றேன் அவர்கள் நிற்க, புதுப்பட்டி
யென்று ஓர் சிறிய பட்டியிற் ஓர் நாயக்கர் தன் தகப்பன் காலமுதல்
யிந்த நூலை ஷை நாயக்கரும் என்னிடம் வாங்கிப் பார்க்கும்வரை
வட்டி வாங்கியவராகவே தானிருந்தாராம். அவர்களும் நம்மிடம்
இந்த ஷரீஹத்தின் தர்பாரைவாங்கி படித்துப் பார்த்தவுடனே கடவு
ளுடைய ஆக்கினை சக்கரத்திற்கு பயந்து அதுமுதல் வட்டிப் பத்தி
ரங்களிற்கண்ட கூடிய வட்டிகளை விடுதலைசெய்தே அசல் தொகை
களாகவேவாங்கி பூராவும் ரத்துசெய்துவிட்டார். அவர் யிந்துவா
யிருந்தாலும் ஆண்டவனுடைய ஆக்கினையைப்பற்றி முக்கியம் கவ
னித்து விட்டார. நம் முஸ்லீம்களிற் சிலர் இன்னும் மேலேகண்ட
தென்பாங்கின் சங்கதியைவிட்டு மீளாமலிருப்பவர்களை இன்னூல்
மூன்றாவது பதிப்பிலும் மேலேகண்ட வட்டி கந்துக்கடைனோர்களா-
கிய தீனோர்களின் சங்கதியைப்பற்றி நாம் அடிக்கடி அவர்களுக்கு
நன்றாக கூறுவோமாக. மேலேகண்ட நாயக்கரை இன்னாரென்றறிந்து
கொள்ள விரும்பினோர்களுக்கு இன்னூல் 4 நான்காவது பதிப்பில்
தெரியும்படி இவர் பெயரை வெளியிடுவோமாக ஆனதால் கனவான்
களே கீழ்க்கண்ட முக்கிய விஷயங்களைப்பற்றி கும்மியாக பாடுவதற்
காரம்பித்ததின்கருத்து பெரியோர்கள் முதல் சிசுக்கள்வரை இன்
னூலை வேண்டி இச்செய்கையுற்றவர்கள் பூராவுக்கும் விருத்தம்
வெண்பா, கும்மியாகவும்பாடி இச்செய்கை பூராவையும் நிறுத்திவிட
வேண்டுவதற்கான முயற்சியேயிவை. கும்மியென்பது கைதட்
டியடிப்பதல்ல தன்னுடை மனதில் கடவுளுடைய ஆக்கினைக்கு
நரகத்தைப்பற்றியும் அச்சமுற்று மனதில் வியாகூலப்பட்டு கடவு
டம் என்ன ஜவாப் சொலவோமென்றெண்ணி அழுது தொழுது
யேந்திதுஆ கேள்ப்பதுதான் கும்மி யென்றறியவும்.

## கும்மி.

கும்மியடி மனக்கண்ணாலே ஹக்கன்
கூரிடும் வஹதானவைக் கோரியடிக்
கந்துக்கடைமேலே சொந்தமக்கும்மி யென்றும்
வந்தவளை பூவேசர் தங்கிய

கைதட்டிக் கும்மியடிக்க ஹராம் தீட்டுறர்
மெய்விட்டுப் பொய்யைத் தொடுக்க ஹராம்
பொய்விட்டு மெய்யை கைகொண்டோர்குலகிற்
போதும் ஐசுரியம் மகனிடரே
அல்லாவின் உததாரம்தன்னைத் தட்டிநீங்
ளாகாத வட்டியை வாங்கிக்கெட்டே
நன்றாய் ருசிக்கிது காப்பி ரொட்டி நாஸடா
தின்றுகை கண்டீரே மானிடரே
கந்து வட்டிக்காசு காப்பி ரொட்டிக் காச்சுக்
கழுதைபோல் தேகம் ஊதலாச்சு
சொந்தப்பணமென்று தின்னஹராம் காசு
வந்த வழிதேடி யோடிப்போச்சு
இந்த சபைதேடிவந்த பெரியோரே
கந்துக் கடைட்யுற்ற தேசங்களும்
சொந்தமென்றே மிகபந்தங் கொண்டாடிடும்—வட்டி
அந்த கறைவிட்டு மீளகேளும்
சேலம் செவ்வாப்பேட்டை சென்னப்பட்டணம் வரை
சேர்ந்துயிருக்குது கந்துக்கடை
சோளதேசந்தொட்டு நீளத்தென்னிந்தியா
சொந்தம் பாரூட்டியே சென்றுவிட்டார்
தெர்க்குக் கடற்கரை திருவனந்தபுரம்
சேதுபதியுமிருக்குமிடம்
பக்கமலையாளம் கொச்சி தேசம்வரை
பார்த்துக் கந்துகள் வைத்துவிட்டார்
பக்கமலையாளம பார்த்த பின்னுடியே
பாய்ந்திட்டார் ஒசூர்கிஸ்ட்ணகிரி
தக்கபடி லாபம் தர்மாபுரியெனறு
நாட்டுத் தாட்டாய்க் கந்தைவைத்து விட்டார்
கந்துக் கடையாறை கண்ணீர்க்காண்வென்றால்
கரண்டைக் காலின்மட்டும் ஜுப்பாயிட்டி நிற்பார்
சொந்தமாய் பள்ளியிர்வந்து தொழுவதைச்
சொல்லமுடியாது மானிடரே
குருஆன்கித்தாபு ஓதிக்கொண்டுலகிற்
குருட்டி புலீசைப்போலே சிலர்
வரும்மகஷரில் கந்துவட்டிப் பாவம்
வந்தாலறிவோமென்ற கள்ளர்
ந்து வட்டியாரே காப்பு றொட்டியாரேக்
ட்டும் சருபந்துக் கட்டுடனேக்
காட்டிடத் தேளுடன் அறவம்சேர்திட்டால்
ணங்களெப்படி மானிடரே
கோவேரு கழுதைக்கொப்பான பருந்தேள்
கூடியெழுபது கொடுக்குடன்—அணல்

தாவும் நகரத்தில் கூட்டங்கூட்டமந்த
தண்டனை வட்டியின் மானிடர்கே
எப்படி தண்டனை யெப்படியோவென்று
ஏனோ மதிமோசம போகாதீர்
அபபோது யெப்படி காப்பி ரொட்டியென்று
அலாக கொட்டுககான் ம்ானிடரே
கந்து வட்டிக்சாக வாங்கியதுட்டினில்
காப்பி ரொட்டிதின்ன ஹராம்தான்
அந்தக காப்பி ரொட்டிவந்து மசஷரில்
ஆதியிடம் சாக்ஷி சொல்விடுங்காண்
கந்து வட்டிதின்ற கருமந்திரதிடக
கத்தம்பாத்தி ஹாக்கள் செய்திட்டாலும்
அந்தப் பசப்பாலெயிந்தக் கொடுமைகள்
அகலாது கண்டரி மானிடரே
இரும்புக் கடப்பாரைக் கம்பியை தேன்
கொட்டெடுத்து விளுங்கியே சுக்சாலே
விரும்பிக் கிசாயங்குடித்தாலுங் கம்பி
வெளியில் வருமோ மானிடரே
இந்தப்பாத்தி ஹாவும கந்துக்கடைக்கென
சொந்த மனைவிகளோடுறைப்பார்
அந்தப்பாத்தி ஹரவும் கத்தமுங்கூடியே
மகஷர்மைதானிலே சாக்ஷியாகும்
பெண்டுகள் வாங்கிடும் வட்டியை நம்மாலே
பேசமுடியாது பெண்மயிலே
தொண்டுவரும்படி தங்கச்சாப்பளிக்
கொப்புடன் சங்கிலிக் கிய்யவென்பாள்
கத்தம்பாத்திஹா சாக்ஷிகளால் வட்டிக்
கணக்கின் சட்டப்படியாதி யும்மை
நித்தம் நறகிடம் கத்திப்புலயபிட
உத்தாரமாடும நாளபிலே
மலைபோல்வன்னி வளர்ந்திடும் காளிநித்
வானோர்கள்வந்து வளைந்திடுவார்
துலையாக்கவலை மலைபோல்ாணபின்
நலவைத்தருமோ கந்து வட்டி
கண்ணையும் உச்சியில் வைத்து ரஹமான்
கணக்குக் கேழ்வை களாகும் போது
எண்ணி ஹதீதீனபடி நன்மை செய்திட
ஏங்கிடில் வருமொ மானிடரே
கொடுமை வெய்யலில் மூளை கொதித்திட
அடிமைக் கூட்டங்கள் கூடி நிர்க
அந்தச்சமயத்தில் கழது வட்டி வந்து
ஆயாசம் தீர்குமோ மானிடரே

177523

மண்ணில் பாதம் தீண்டாவள்ளல் நபியவர்
வந்திடும் வேளையது வாகும்)
அண்ணல் முகமம தரும்மத்தை தன்னோட
ழைத்து வரும்படி உத்தாரமாம்
நாளது வாமகஷர் நாளதுவா மங்கே
நம்மை யுந்தீதை நிறுகரு மன்னுள்
கோலம்முடன் நபி வந்து நமதுடக்
கொடுமை தீர்த்திடும் நாளதுவே
ஆதி சமுகத்திலாகும் விச்சாரணையில்
அன்னல நபியுமே வந்திருப்பார்
எழாம் நறகிர்கு ஆள ' கு முன்னமே
இறங்கி ரக்ஷிக்கும நாளதுவே
எழுபத்தி மூன்று சப்பாகத்தாரனும்
எழுந்து நின்றிடும் வேளையிலே
பழுதற்ற நாயன் பட்டா ஓலையைப்
பார்த்து தீரப்புச்செய்திடுவான்
நாளை வந்திடும் மகஷர் தினக்கு
நமது நாயகம் வேண்டுமானால்ப்
பாளையாய் போகாமர் பதரை நீக்கியே
பாத்து துத்திக்கொள் மானிடரே
கந்து வட்டிக்கடை வைத்திட நாடுவோர்
கட்டாயம் தலைபரை சிசைப்பார்
வந்திடுந்தாடி மளுங்க மொட்டை தட்டி
வானரம போலவே தானிருப்பார்
எஹூதி நஷாராய் போலே தலையில்
எதுத்த கிருப்புகள் வைக்கச்செய்யு
தகுதி யுற்றிடுந்தாடிதனை வெட்டி
தககள் குலம் வேறாய்க் காட்டச்செய்யும்
காட்டச் செய்யுமது காட்டச்செய்யும்வட்டி
தட்டிப்பரித்திடக் காட்டச்செய்யும
வேதப்பறையரின் மக்களைப் போலேவே
வேசப்மா ருட்டியே காட்டச்செய்யும
சிட்டாக்குரிப்புமே றேட்டுடனே
சேர்த வாறப் பட்டியுடன்
கட்டுக்கட்டாகவேச்சுருணை செய்திட்ட
கணக்கு கச்சாத்தும்தா நெடுப்பார்
திட்டம்வரவுகள் கணக்குப்பார்த்திடத்
திபவெட்டி விளக்குகள் போட்டுக்கொள்வார்—கந்து
இட்ட வாறப்பட்டி கணக்கை பாரென
கணக்கப்பிள்ளைகளி திட்டம் செய்வார்
ந்து வாறப்பட்டி க்கணக்கு கச்சாததில்
ழித்தல் டோட்டல்ப் பெருக்கும்போது

அந்த துகையினிற் கந்தர்க்கணக்கிலே
ஐம்பதுரூபாயைக் காணு மென்பார்
ஐம்பது ரூபாயைக காணு மெனவே
அருதியாய்க் கணக்கபிள்ளை சொல்ல
ஐம்பது கைமுதல் பய்யெடுத்து வந்து
ஆலோசித் தெழுதிப்பாரு மென்பார்
பார்த்த வுடனே கணக்கபிள்ளை யவர்ப்
பாதியில் பாதியும் தேரு தென்பார்
பாதியும் தேர்க்கிட்டால் ஆகிதன் பிள்ளிக்கு
பங்கு அறைக்கால் மிக மைன்பார்
சிட்டாக் குரிப்பு பேரேட்டுடனே
சேர்த ஆள்க்கள் சுகிதமாய்
மட்டி லடங்காத கந்து எஜமான்
வந்து விட்டாரவர்கள் சநதை வட்டம்
சந்தை தனில் வந்து ஜம்காளமிட்டு
தந்திரமாகவே வீற்றிருந்தார்
சந்தைச் சிட்டாவைத் தாநெடுத்து வெகு
ஜம்பமாய்வை கூலைப்பார்க்கும்போது
ஆருமணி நல்ல வேளை யப்போதைம்
துருபாய் பாக்கி தாறன் வந்தான்
பாச்கி தாறனைக் கண்ட வுடநவனைப்
பற்றி யேகைபை ப்பிடித்திழுத்தே
கைய்யைப் பிடித்து யிழுத தவுட நவனைக்
கன்னத்தில் ஓரடி வைத்தானும்
அய்யா பென்னை அடியாதீரென்று
அபயக் கூச்கிரலிட்டானும்
அபயக் கூக்குரல் சப்தத்தைக் கேட்டோர்
ஆளுக்கோர் கம்புட நோடி வந்து
வந்து வளைந்து ஜனங்களொன்றுய்க்கூடி
வாக்கு மூலங்களைக் கேட்டாரும்
வாக்கு மூல விசாரணை தனிலே
வகை விபரம் மரிந்தாரார்
ஜாக்கிரதைதாக வேடாக்டரிடமடி
சாட்பிக்கெட்டயுப் பெற்றாராம்
சரட்பிக்கெட்டைப் பெற்ற பின்னுடியே—பிறது
ஜாமே துரையிடம் போட்டானும்
வந்த பிறுதுக்கு துரையவர் கோர்ட்டு
சொந்த சமனையும் விட்டாரும்
ஜாமே துரை சமனைப்பெற்றுக் கொள்ளாமலே
சாலை வழியிலே ஓடினாராம்
ஏமைய்யா மா மகா ரெக்கடப்போத்தாவு

துத்தரி மாதர் சோதிக்கனே ஓட்டத்தில்
எத்தனே யுத்தார பதில் சொலவேன்.
வெத்தி யென்றிக் கேசில் முத்தி பெருமாகில்
சத்திய மாகவுரைப்பேன போ
சமனேப் பெறுமலே ஓடி வந்தவர்கள்
சந்தை வசூலுக்கே போக வில்லே
அந்த சமன்கன் தான ஜாமின் வாறண்டாகி
ஆளுக் கொரு தேசம் தேடிடு தாம்

வசனம்.

வாருங்கள் உலக சமாதனத்தையும் நன்மாருயத்தைப் பொருத்தும்மெய்பொருளான கடவுள் யிருஜஹானுக்கும் சக்கரவத்தியான ஆண்டவனுடைய திருவாங்கியத்தின்படியே நடைபெற்றும உலகத்தோடொற்று வகிக்கின்ற மகா ஜனங்களான யெனது நேசர்களே பாருங்கள்.

உலக மாந்தர்கள் செய்யக்கூடியவர்த் தங்கள் நடை பெற்று வருவதில்—வட்டியும்—வாக்கந்தும் ஷி ஷாஹின்படியேஹருமானத்தால்மேலேகண்ட வட்டிக்குவார்டையவர்கள்யெவ்வார் சாலேவழியே ஒட்டமெடுத்தார்களே அவ்விதமாக சொத்துகளும் சவ்வக்ருகி விடுமென்பது நிக்ஷயமென்றே நம்புவீர்களாக. ரூேட்டு வழி ஓடிச்செள்ற கந்து வட்டி காறன் தங்களுரில் சென்ற வுடண் அங்குளளவர்கள் கேட்டு யிவர்களேப் போலொற்ற வட்டிஞர்கள் கூடி உதவி புரீதலின் கருததை மிகவும் கவனிப்பீரகளாக.

ஓடிச் சென்ற வட்டிக்காரற்களுக்கு
உள்ளூர் வட்டியர்கள் கூரும் தந்திர உபகாரம்

கும்மி.

ஜாமேதுறை யிட்ட சமன்கனே நீங்கள்
ஜர்க்கர்தையாகவே வேண்டிக்கொண்டு
வக்கீல் துரைக்கி தந்தி கொடுத்தால்
வருவாறிரங்கி வாயிதாவில்
வக்கீல் துரைகள் வாங்கிடும் பீசுகள்
வகை விபாங்களென்ன வென்ருர்
வக்காலத்துப்பீசு வக்கீல் துரையும்
வாங்குவதா யிரமென்று ரைத்தார்.
அந்தப்படியே வக்கீல் துரைக்கு
அர்ஜண்டுத் தந்தி கொடுக்கும்போது
முந்தி யெவர்தெங்கள் ஈறங்கிக்கேசின்
முடிவு தெரிய வென்றடித்து
க்கீல் துரையிடம் வக்காலத்துபாரம்
ாங்கி யெழுதிக் கொடுத்தவுடன்
க, ஒப்பங்களிட்டிட ஈறங்கி வாயிதா.
ன்று-2- தேதி யேற்படடாதே

என்றொரு நாயக்கர் கேட்டாரு
எந்த விதமாக வந்த தோபணம்
அந்த விதமே வழி பார்க்கும்
கந்து வட்டிக்காசுகசேரிக்கிரை யென்று
கண்டு கொண்டீரல்லோ மானிடரே

ஓட்டினில் களியைத்திங்கும் படிசெய்யும்
உங்களின் வட்டி கந்தே பாறமே—யான்
பாடடினில் சொன்னது பொய் யேது காணிந்தப்
பாருலகுதனில் மானிடரே

ஈறங்கி வாயிதா யேற்பட்டிருக்கயில்
எடுத்தார் யோசினை கந்தெஜமான்—வட்டி
வாரப்பங்கான வககீல் துரைக்கிக்
கட்டி ஒருயிரம் கொட்ட பின்னர்

உள்ளதைக் சிலவு செய்து விட்டாகிலும்
உமரெ நாடியே போக வென்று
அல்லாவின் சொல்லே யகற்றிய வட்டி முதல்
நில்லாதிந்தகேக்கச பொல்லாதென்றும்

எந்த விதத்தாலும் யிட்ட பிராதிற்க்கு
இன்று தினம் கோர்ட்டில் வாதிசென்று
சொந்தமுடன் ராஜிநாமாச் செய்திட
தந்தானும் அய்நூறு ரூபாயே

ஐநூறையும் கையில் பெற்றுக்கொண்ட வாதி
ஆலோசித்தவ னேதுசெய்தான
எட்டணு ஸ்டாம்பையெடுத்து ஒட்டியும்
ஏக ராஜிநாமாச் செய்தானும்

அடியொன்றிற்குச் சிலவாயிரத்தை நூறுய்
ஆக்கிடும் கண்டரி கந்து வட்டி
தடியும் ஜம்காளம் தோளினில் போட்டுத்
தவிக்கச் செய்திடும் கச்சேரியில்

வேண்டாங்காண் வேண்டாங்கான் விட்டுவிடு
கந்து வட்டியாலுங்கள் குடி கெட்டேவிடும்—நரகில்
ஓயாதடிகளே வாங்கவேண்டாம் நீங்கள்
வயிலெனும் ஓடைக்கிரையாக வேண்டாம்

அகலாதபாவங்கள் ஷிருக்குபித்அத்து
ஆதிசமுகத்தில் தாககீதாகும
வஹதாவின் உத்தாரம்தன்னே தட்டிநம்மவ்
வல்லோன் சமுகத்தி லென்னுசொல்வீர்

அகலாதகலாத கலாதென்றே
ஆணை சத்தியம் செப்பினேனே
பகலையிற்க்கதிரோன்பார் மீதுதித்தல்போல்
பார்த்துக்கொள்வீரினி 2-ம் பாகம்.

கேமமுளதீனோ ரென்றிருந்தும் சில
ரேமாந்து முளைப்பாரி கட்டி
ஈமாதிளந்தே சிறுவர்கள் கையினிலெடுத்து
ஒட்டைக் கொடுக்கலாமோ

சின்னம் சிறுவர் திய்ஓடேடுத்துதே
வன்னைமுத்தாலே கொண்டாடுவர்போல்
மன்னர் முகம்மதரும் மத்திலே ஈமான்
மாரினோர் தீனவராவறோ சொல்

மூமின்த்வரிடில் மார்கவிஷயத்தை அடுத்தோர்
முக்கியமாக வெடித்துரைப்போம்
காமியருலே நீர்கெட்டு விடாமலெக்
கண்டிப்பாயுரைப்போம் மானிடரே

வள்ளல்மா நகர்தன்னில் வசித்திட்ட
வளம்பெறும் கான்முஹம்மதெனபோர்
தெள்ளரும் குணசீலர் சேயெனப்பிறந்த
சிறியேன் முஹம்மதிபுறுஹீம்

தெள்ளும் ஷரீஹத்தின் தர்பாராகவே
தீநின்னெறி முறைதவராமல்
பன்னுந்தமிழாலே பாடிவிட்டேனிதைப்
பாரினில் தீனோர்கள் தானறிய.

முற்றிற்று.

விருத்தம்.

ஆகமியில் தீனோர்செய்த அரும்பிழை பொருத்தல்தேடி
நீதமுளநபி நிபுணர்தமக்கரசாம் கெடியோன்றாதர்
கோதகவேஉம்மத்தோர் குறைதீரகுதாவிடத்திற் கேட்கமேலாம்
ஆதரவாய் [illegible] வரையும் காத்தருள ஆமீனாமீன்.

# விளம்பரம்.

இதனால் சகல சனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் இந்த ஷரீஹத்தின் கர்பாரென்னும் அருமையான புத்தகமும் அடியிற் கண்ட புத்தகங்களும் நம்மிடம் நேரிலும் வி- பி- போஸ்டு மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| மிகவும் அருமையான புத்தகங்கள்- கேர்ஷா அலங்காரம் 3ம் பதிப்பு புத்தகம் 1- க்கு | 0—3—0 |
| இதே ஷரீஹத்தின் தர்பார் 3- ம் பதிப்புபுக்கு 1 க்கு | 0—2—0 |
| புதுமை அலங்கார சிந்து 1-க்கு | 0—1—6 |
| மனதை துலக்கும் மார்க்க ரத்தினம் புக் 1-க்கு | 0—4—0 |
| பயகாம்பர் பரிமள புத்தகம் 1-க்கு | 0—2—0 |

இவைகளோடு நமது நபி நாயகத்தின் மீது பாடிய பயஹாம்பர் பரிமள மென்னும் புத்தகமும்- ஷரீஹத்தின் தர்பார் இரண்டாம் பாகமும் தெள்ளிய முஸ்லீம நலல அறிவொழுக்கமென்னும புத்தகமும் மஹஷர் விளக்க மென்னும் புத்தகமும் அச்சிலிருக்கிறது இன்ஷா அல்லா கூடிய சீக்கிரத்தில் வெளி வரும் மேஷ் புத்தகங்கள் ஒரே தடவையிற் பெற்றுக்கொள்பவர்களுக்கு டஜன் 1-க்கு 2 புத்தகங்கள் இனும் கொடுக்கப்படும்.

பெற்றுக்கொள்ளுமிடங்கள்.

கரூர் பள்ளபட்டி மேலத்தெருவு ஐதுருசு மரைக்காயர் வீதியில்- அன்னஞ்சி- மா-கா முஹம்மது இபுராஹிம் சாஹிபு பென்றும் வத்தலக்குண்டு மார்க்கம் அய்யம்பாளையம் போஸ்டு நெல்லூர் ரெங்க சமுத்திரம் மா. கா. முகம்மது இபுராகிம் சாஹிபு பென்றும் இந்த இரண்டு யிடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு

மா. கா. முகம்மது இபுராஹிம் சாஹிபு.

மார்க்கமா தகர்,